

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் நாவலர் நெடுஞ்செழியன் நகர் திட்டப்பகுதியில் ரூ.76.87 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 450 அடுக்குமாடி குடியிருப்பினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை முதன்மைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.பிரபாகர், இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் க.விஜயகார்த்திகேயன், உட்பட பலர் உள்ளனர்.

## இந்துசமய அறநிலையத்துறை சார்பில்

# 172 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஆக. 21-**

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் இந்து சமய அறநிலையத்துறையில் உதவியாளர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 172 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

இது குறித்து வெளியான செய்திக் குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.08.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறையின் அமைச்சுப்பணியில் உதவியாளர் பணியிடத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 172 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களை முறையாக பராமரித்தல், சொத்துகளை பாதுகாத்தல் மற்றும் நிர்வகிக்கும் பணிகளை மேற்கொண்டு வரும் செயல் அலுவலர் பணியிடங்களும், துறையின் அமைச்சுப்பணியில் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்களும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நிரப்பப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் செயல் அலுவலர் (நிலை1, நிலை3 மற்றும் நிலை4) பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 169 நபர்களுக்கும், இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 80 நபர்களுக்கும், தட்டச்சர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 101 நபர்களுக்கும் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை 3) பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 31 நபர்களுக்கும், என மொத்தம் 381 நபர்களுக்கு ஏற்கனவே பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கருணை அடிப்படையில் துறையில் இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலர் ஆகிய பணியிடங்களுக்கு 29 நபர்களுக்கும், திருக்கோயில்கள் சார்பில் 111 நபர்களுக்கும் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், இந்து சமய அறநிலையத்துறையில் பதவி உயர்வு வழங்கப்படாமல் நீண்டகாலமாக நிலுவையில் இருந்த 713 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டதோடு, திருக்கோயில்களில் தொடர்ந்து 5 ஆண்டுகள் தற்காலிகமாக பணிபுரிந்த 1,289 பணியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத்துறையின் அமைச்சுப்பணியில் உதவியாளர் பணியிடத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 172 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். முதலமைச்சர் அவர்களால் நேற்று 172 உதவியாளர் பணியிடத்திற்கு வழங்கப்பட்ட பணிநியமன ஆணைகளையும் சேர்த்து கடந்த மூன்று ஆண்டுகளில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் மொத்தம் 693 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா. பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், 1 இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பொதுப் பணித்துறை சார்பில் சென்னை மண்டலம் சார்ந்த பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

சென்னை, ஆக.21-

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று (20.08.2024) சேப்பாக்கம் பொதுப்பணித் துறை கூட்டரங்கில், பொதுப்பணித்துறையின் சென்னை மண்டலம் மூலம் கட்டப்பட்டு வரும் கட்டடப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

குறிப்பாக, கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட பணிகள், பொதுப்பணித் துறை மற்றும் இதர துறையின் அறிவிப்பு பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

கலைஞர் மாநாட்டு மையம் - புதுடெல்லி!

ஆய்வுக் கூட்டத்தை தொடங்கி வைத்து உரையாற்றுகையில், தமிழ்நாடு அரசின் முத்திரைத் திட்டங்களான, “கலைஞர் மாநாட்டு மையம், புதுதில்லி தமிழ்நாடு இல்ல புதிய கட்டடம், வள்ளுவர் கோட்ட புனரமைப்புப் பணி, சென்னை எழும்பூர் கோஆப்டெக்ஸ் யூனிட்டி மால் கட்டடம்” ஆகிய கட்டடப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்த இப்பணிகளை விரைவாக முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

தலைமைக் கட்டடக் கலைஞர் அவர்கள், முக்கிய அறிவிப்பு பணிகளுக்கு வரைபடங்களை உடனடியாக தயாரித்து அளித்திட வேண்டும் என்றும், திட்டம் மற்றும் வடிமைப்பு கண்காணிப்புப் பொறியாளர் அனைத்து பணிகளுக்கும் கட்டட வடிவமைப்பு வரைபடம்(Design) குறித்த காலத்தில் பணித்தளத்திற்கு வழங்க வேண்டும். சென்னை கட்டடப் பாராமரிப்பு வட்ட கண்காணிப்புப் பொறியாளர் பொது மக்கள் பயன்பாட்டில் உள்ள மருத்துவமனை மற்றும் பிற முக்கிய கட்டடங்களை அவ்வப்போது ஆய்வு செய்து, ஆய்வுக் குறிப்புகளை பதிவு செய்திட வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

சென்னை, இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, கீழ்பாக்கம் மருத்துவமனை போன்று அரசு மருத்துவமனைகளில் அதிகளவில் கட்டடப் பணிகள் நடைபெறுவதால், பெரும்பாலான மின் தூக்கிகள் மக்களின் பயன்பாட்டில் இல்லை என்பதால், மின் தூக்கிகள் இயங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொதுப்பணித் துறையின் தரக்கட்டுப்பாட்டுக் கோட்ட பொறியாளர்கள் அனைத்து கட்டடப் பணிகளையும் அவசியம் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றும், தமிழ்நாடு அரசின் முத்திரைத் திட்டப் பணிகளில் சிறப்பு கவனம் செலுத்தி, குறித்த காலத்தில் கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

அரசுப் பணியாளர்களுக்கான குடியிருப்பு கட்டும் பணிகளில் தாமதமின்றி குறித்த காலத்தில் பணிகள் முடிக்க வேண்டும் என்றும், புதிய கட்டடங்கள் கட்டும் பணிகளுக்கான மதிப்பீடு தயாரித்தலில் பயன்பாட்டு துறையிடம் குறித்த நேரத்தில் கருத்துரு பெற்று தயாரித்தல் வேண்டும் என்றும், கட்டடம் கட்டுவதற்குமுன் மண் பரிசோதனை செய்து, மண் தன்மைக்கு ஏற்றவாறு கட்டடங்கள் உறுதித் தன்மையுடன் கட்டப்பட வேண்டும் என்று உத்தரவிட்டார்.

கட்டடக் கலைஞர்கள் கட்டட வரைபடங்கள் தயாரிக்கும்போது, கட்டடங்களில் அமைக்கப்படும் கழிவுநீர் குழாய்கள் வெளியேறும் பகுதி, மின் அமைப்புகள் உள்ள பகுதிகளில் கான்கிரிட் போன்ற அமைப்புகள் குறுக்கீடு இல்லாமல் வடிவமைக்க வேண்டும் என்று அறிவுறுத்திய அமைச்சர், கட்டடங்களில் நீர்கசிவு ஏற்படாத வண்ணம் தேவையான வாட்டர் ப்ரூப் நடைமுறைகளை அவசியம் பயன்படுத்த வேண்டும். எம்சான்ட் சுவர் பூச்சு பயன்பாட்டிற்கு தேவையான கெமிக்கல் கலவை பயன்படுத்த வேண்டும். மின் பொறியாளர்கள் அவ்வப்போது மின் அமைப்புகளை ஆய்வு செய்து மின் கசிவு ஏதும் ஏற்படா வண்ணம் பாதுகாக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா, முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி. சத்தியமூர்த்தி, சிறப்புப் பணி அலுவலர் இரா.விஸ்வநாத், சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் மணிவண்ணன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் பிறந்ததினத்தை முன்னிட்டு சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் ஒன்றிய, நகர் கழக நிர்வாகிகள் உள்ளார்கள்.




36வது வட்ட தி.மு.க. - பெரம்பூர் தெற்கு பகுதி - சென்னை வடக்கு மாவட்டம்